# நவம்பர் – 22 – புதன்

**புனித சிசிலியா**

**ஆண்டவரே, என் வழக்கின் நியாயத்தைக் கேட்டருளும்: திபா. 17:1**

## முதல் வாசகம் : 2 மக்கபே 7 : 1, 20 – 31

அக்காலத்தில் சகோதரர்கள் எழுவரும் அவர்களுடைய தாயும் கைதுசெய்யப்பட்டார்கள் சாட்டைகளாலும் வார்களாலும் அடிக்கப்பட்டுச் சட்டத்துக்கு முரணாகப் பன்றி இறைச்சியை உண்ணும்படி மன்னனால் கட்டாயப்படுத்தப்பட்டார்கள். எல்லாருக்கும் மேலாக, அவர்களுடைய தாய் மிகவும் போற்றுதற்குரியவர், பெரும் புகழுக்குரியவர். ஒரே நாளில் தம் ஏழு மைந்தர்களும் கொல்லப்பட்டதை அவர் கண்டபோதிலும், ஆண்டவர்மீது கொண்டிருந்த நம்பிக்கையால் அவை அனைத் தையும் மிகத் துணிவோடு தாங்கிக் கொண்டார் அவர்கள் ஒவ்வொருவருக்கும் தாய்மொழியில் அறிவுரை கூறினார் பெருந்தன்மை நிறைந்தவராய்ப் பெண்ணுக்குரிய பண்பையும் ஆணுக்குரிய துணிவையும் இணைத்து அவர்களிடம், "நீங்கள் என் வயிற்றில் எவ்வாறு உருவானீர்கள் என நான் அறியேன் உங்களுக்கு உயிரும் மூச்சும் அளித்ததும் நான் அல்ல் உங்களுடைய உள்ளுறுப்புகளை ஒன்றுசேர்த்ததும் நான் அல்ல. உலகைப் படைத்தவரே மனித இனத்தை உருவாக்கியவர் எல்லா பொருள்களையும் உண்டாக்கியவர் அவரே தம் இரக்கத்தினால் உங்களுக்கு உயிரையும் மூச்சையும் மீண்டும் கொடுப்பார் ஏனெனில் அவருடைய சட்டங்களை முன்னிட்டு நீங்கள் இப்போது உங்களையே பொருட்படுத்துவதில்லை" என்றார். தாம் இகழப் படுவதாக அந்தியோக்கு நினைத்தான் அந்தத் தாயின் கூற்றில் ஏளனம் இருப்பதாக ஐயுற்றான் எல்லாருக்கும் இளைய சகோதரர் இன்னும் உயிரோடு இருக்கக் கண்டு, "உன் முதாதையரின் பழக்கவழக்கங்களை நீ கைவிட்டுவிட்டால், உன்னைச் செல்வ னாகவும் பிறர் அழுக்காறுகொள்ளும் வகையில் உயர்ந்த வனாகவும் ஆக்குவதோடு, என் நண்பனாகவும் ஏற்றுக்கொண்டு உனக்கு உயர் பதவி வழங்குவேன்" என்று சொன்னது மட்டுமன்றி உறுதியும் கூறி ஆணையிட்டான். அவ்விளைஞர் மன்னனின் சொற்களுக்குச் சிறிதும் செவிசாய்க்காததால், அவருடைய தாயை அவன் தன்னிடம் அழைத்து, அந்த இளைஞர் தம்மையே காத்துக்கொள்ளும்படி அறிவுரை கூறுமாறு வேண்டினான். மன்னன் அவரை மிகவும் வேண்டிக்கொண்டதனால், அந்தத் தாய் தம் மகனை இணங்க வைக்க இசைந்தார். ஆனால் அந்தக் கொடுங்கோலனை ஏளனம் செய்தவராய், அவர் தம் மகன் பக்கம் குனிந்தவாறு தம் தாய்மொழியில், "மகனே, என்மீது இரக்கங்கொள். ஒன்பது மாதம் உன்னை என் வயிற்றில் சுமந்தேன் மூன்று ஆண்டு உனக்குப் பாலூட்டி வளர்த்தேன் இந்த வயது வரை உன்னைப் பேணிக் காத்துவந்துள்ளேன். குழந்தாய், உன்னை நான் வேண்டுவது விண்ணையும் மண்ணையும் பார் அவற்றில் உள்ள அனைத்தையும் உற்று நோக்கு. கடவுள் இவை அனைத்தையும் ஏற்கெனவே இருந்தவற்றிலிருந்து உண்டாக்க வில்லை. இவ்வாறே மனித இனமும் தோன்றிற்று என்பதை அறிந்துகொள்வாய். இக்கொலைஞனுக்கு அஞ்சாதே ஆனால் நீ உன் சகோதரர்களுக்கு ஏற்றவன் என மெய்ப்பித்துக் காட்டு. இறைவனின் இரக்கத்தால் உன் சகோதரர்களோடு உன்னையும் நான் திரும்பப் பெற்றுக்கொள்ளும்படி இப்போது சாவை ஏற்றுக்கொள்" என்று சொல்லி ஊக்கமூட்டினார். தாய் பேசி முடிப்பதற்குள் அந்த இளைஞர் பின்வருமாறு கூறினார் "எதற்காக நீங்கள் காத்துக் கொண்டிருக்கிறீர்கள்? மன்னனின் கட்டளைக்கு நான் கீழ்ப்படியமாட்டேன். மோசே வழியாக எங்கள் மூதாதையருக்குக் கொடுக்கப்பட்ட திருச்சட்டத்தின் கட்டளை களுக்கே கீழ்ப்படிவேன். எபிரேயருக்கு எதிராக எல்லா வகைத் துன்பங்களையும் திட்டமிட்ட நீ, கடவுளின் கைக்குத் தப்பமாட்டாய்

**பதில்பாடல் :** நானோ விழித்தெழும் போது உம் உருவம் கண்டு நிறைவடைவேன்

## நற்செய்தி : லூக்கா 19 : 11 - 28

அக்காலத்தில் இயேசு எருசலேமை நெருங்கி வந்து கொண்டி ருந்தார். அவர் சொன்னதைக் கேட்டுக்கொண்டிருந்தவர்கள் இறையாட்சி உடனடியாகத் தோன்றப்போகிறது என்று நினைத் தார்கள். அப்போது இயேசு மேலும் ஓர் உவமையைச் சொன்னார். "உயர் குடிமகன் ஒருவர் ஆட்சியுரிமை பெற்றுவரத் தொலை நாட்டிற்குப் போகப் புறப்பட்டார். அப்போது அவர் தம் பணியாளர்கள் பத்துப் பேரை அழைத்து, பத்து மினாக்களை அவர்களிடம் கொடுத்து அவர்களை நோக்கி, "நான் வரும்வரை இவற்றை வைத்து வாணிகம் செய்யுங்கள்" என்று சொன்னார். அவருடைய குடிமக்களோ, அவரை வெறுத்தனர். எனவே, "இவர் அரசராக இருப்பது எங்களுக்கு விருப்பமில்லை" என்று சொல்லித் தூது அனுப்பினர். இருப்பினும் அவர் ஆட்சியுரிமை பெற்றுத் திரும்பி வந்தார். பின்னர் தம்மிடம் பணம் வாங்கியிருந்த பணியாளர் ஒவ்வொருவரும் ஈட்டியது எவ்வளவு என்று அறிய அவர் அவர்களைக் கூப்பிட்டு அனுப்பினார். முதலாம் பணியாளர் வந்து, "ஐயா, உமது மினாவைக் கொண்டு பத்து மினாக்களைச் சேர்த்துள்ளேன்" என்றார். அதற்கு அவர் அவரிடம், "நன்று, நல்ல பணியாளரே, மிகச் சிறிய பொறுப்புகளில் நம்பிக்கைக்கு உரியவராய் இருந்தீர். எனவே பத்து நகர்களுக்கு அதிகாரியாய் இரும்" என்றார். இரண்டாம் பணியாளர் வந்து, "ஐயா உமது மினாவைக் கொண்டு ஐந்து மினாக்களை ஈட்டியுள்ளேன்" என்றார்., அவர், "எனவே நீர் ஐந்து நகர்களுக்கு அதிகாரியாய் இரும்" என்று அவரிடமும் சொன்னார். வேறொருவர் வந்து, "ஐயா, இதோ உமது மினா. ஒரு கைக்குட்டையில் முடிந்து வைத்திருக்கிறேன். ஏனெனில் நீர் கண்டிப்புள்ளவர் என்று உமக்கு அஞ்சி இப்படிச் செய்தேன். நீர் வைக்காததை எடுக்கிறவர் நீர் விதைக்காததை அறுக்கிறவர்" என்றார். அதற்கு அவர் அவரிடம், "பொல்லாத பணியாளே, உன் வாய்ச் சொல்லைக் கொண்டே உனக்குத் தீர்ப்பிடுகிறேன். நான் கண்டிப்பானவன் வைக்காததை எடுக்கிறவன் விதைக்காததை அறுக்கிறவன் என உனக்குத் தெரியுமல்லவா? அப்படியானால் ஏன் என் பணத்தை வட்டிக் கடையில் கொடுத்து வைக்கவில்லை? நான் வந்து அதை வட்டியோடு சேர்த்துப் பெற்றிருப்பேனே" என்றார். பின்பு அருகில் நின்றவர்களிடம், "அந்த மினாவை அவனிடமிருந்து எடுத்து, பத்து மினாக்கள் உள்ளவருக்குக் கொடுங்கள்" என்றார். அதற்கு அவர்கள், "ஐயா, அவரிடம் பத்து மினாக்கள் இருக்கின்றனவே" என்றார்கள். அவரோ, "உள்ளவர் எவருக்கும் கொடுக்கப்படும். இல்லாதோரிடமிருந்து உள்ளதும் எடுக்கப்படும்" என உங்களுக்குச் சொல்கிறேன்" என்றார். மேலும் அவர், "நான் அரசனாக இருப்பதை விரும்பாத என் பகைவர்களை இங்குக்கொண்டு வந்து என்முன் படுகொலை செய்யுங்கள்" என்று சொன்னார்." இவற்றைச் சொன்னபின்பு இயேசு அவர்களுக்கு முன்பாக எருசலேமுக்குப் புறப்பட்டுச் சென்றார்.

**தியானம்:** எல்லாம் வல்ல இறைவன் தான் படைத்த ஒவ்வொரு மனிதருக்கும் தனித்தனி திறமைகளைக் கொடுத்து அத்திறமைகளை இறைவனுடைய மாட்சிமைக்காகவும், பிறருடைய முன்னேற்றத் திற்காகவும் பயன்படுத்த வேண்டுமென அழைப்பு விடுப்பதாக மினா உவமை தெரிவிக்கின்றது. பிறருடைய திறமைகளையும் இனங்கண்டு அவற்றைப் பயன்படுத்த ஊக்குவிப்பதும் இறைப்பணியே. நம்மைத் தேடிவருகின்ற சவால்களை துணிவோடு சந்திக்க வேண்டும். பயன்படுத்தாத செல்வம் பாழாய்ப்போகும் என்னும் உண்மையை இயேசு நமக்குக் கற்பிக்கிறார். வெவ்வேறு அளவில் தாலந்துகளைப் பெற்றவர்கள் அவற்றைப் பயன்படுத்தி மேலும் செல்வம் ஈட்டினார்கள். ஆனால் ஒருவர் மட்டும் தாலந்தைப் பயன்படுத்தாமல் நிலத்தில் புதைத்துவைத்தார். நற்செய்தியில் தலைவர் பணியாளர்கள் எல்லாருக்கும் மினாக்களைக் கொடுத்துவிட்டு நெடும்பயணம் செல்கிறார். நீண்ட நாட்களுக்குப் பிறகு திரும்பிவந்து மினாக்களைப் பெற்றவர்களிடமிருந்து கணக்குக் கேட்கிறார். முதலில் வந்த பணியாளர்கள் சரியாக கணக்குக் கொடுக்க, கடைசியில் வந்தவரோ சரியான முறையில் கணக்குக் கொடுக்காமல், அதாவது தனக்குக் கொடுக்கப்பட்ட திறமையைப் பயன்படுத்தாமல் தண்டனையைப் பெறுகின்றார். இச்செயல் நமக்கு ஒருசில உண்மைகளைத் தெளிவுபடுத்துகிறது. கடவுளின் படைப்பில் நாம் அனைவரும் சமமானவர்களே. நாமனைவரும் ஒன்றே என்ற உண்மையை பறைசாற்றி கடவுள் நமக்குக் கொடுத்திருக்கும் திறமைகளை, வாய்ப்பு வசதிகளை சரியான முறையில் பயன்படுத்த வேண்டும் என்பதாகும். உவமையில் வரும் முதல் இரண்டு பணியாளர்கள் தலைவர் தங்களுக்குக் கொடுத்த மினாக்களை சரியான முறையில் பயன்படுத்தி தலைவரால் பாராட்டப் படுகிறார்கள். அதே நேரத்தில் கடைசியில் வந்த பணியாளரோ, தலைவர் கொடுத்த மினாவை சரியான முறையில் பயன்படுத்தவில்லை. அதனால் தண்டனையைப் பெறுகின்றார். நாமும் கடவுள் நமக்குக் கொடுத்திருக்கும் திறமையை சரியான முறையில் பயன்படுத்தாதபோது கடவுளிடமிருந்து தண்டனையைப் பெறுகின்றோம் என்பது உறுதி.